**மிக அவசரம்**

பணியாளர் மற்றும் நிர்வாக
சீர்திருத்த (கே) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009,

**கடித எண். 20335/கே/2010–1, நாள்: 19.05.2010**

அனுப்புநர்
திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

ஐயா,

பொருள் பணியாளர் சங்கம் – தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் – 57–வது மாநில மாநாடு 22.05.2010 (சனிக்கிழமை) அன்று நடைபெறுவது 21.05.2010 (வெள்ளிக்கிழமை) அன்று சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்குதல் – அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியக் கடித எண். 82/த.நா.அ.அ.ஒ/2010, நாள் 27.04.2010.

*****

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர், ஒன்றியத்தின் 57–வது மாநில மாநாடு, 22.05.2010 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறவுள்ளதாகவும், மாநாட்டில் கலந்து கொள்ள அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து துறை அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர வகைப் பணியாளர்களுக்கு 21.05.2010 (வெள்ளிக்கிழமை) அன்று சிறப்பு தற்செயல் விடுப்பும், 22.05.2010 (சனிக்கிழமை) அன்று அனுமதியும் அதுபோல் 22.05.2010 (சனிக்கிழமை) அன்று வேலை நாளாக உள்ள பணியாளர்களுக்கு 21.05.2010 (ம) 22.05.2010 ஆகிய இரண்டு தினங்களுக்கு சிறப்புத் தற்செயல் விடுப்பும் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இக்கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து, அவ்வாறே இம்மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் அனைத்து மாவட்ட மற்றும் அனைத்து துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர வகைப் பணியாளர்களுக்கு 21.05.2010 (வெள்ளிக்கிழமை) அன்று சிறப்பு தற்செயல் விடுப்பும் 22.05.2010 (சனிக்கிழமை) அன்று அனுமதியும் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், 22.05.2010 (சனிக்கிழமை) வேலை நாளாக உள்ள பணியாளர்களுக்கு 21.05.2010 மற்றும் 22.05.2010 ஆகிய இரண்டு தினங்களுக்கும் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்க

/2/

அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இவ்வாறு சிறப்பு தற்செயல் விடுப்பு எடுக்கும் அலுவலர்கள் / பணியாளர்கள் / ஆசிரியர்கள், விடுப்பு விண்ணப்பத்துடன், மாநாட்டில் கலந்து கொண்டதற்கான சான்றிதழை உரிய சங்கங்களிடமிருந்து பெற்று உரிய அதிகாரிகளுக்கு அளிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

17/5/2010

அரசு தலைமைச் செயலாளருக்காக.

17/5/10

நகல்:

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம்,
நெ.7, நீலிவீராசாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை–5.